Regd No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0 }

மாலை 19 ஈரோடு 29-12-1945 மார்கழி௴ 15வ. மலர் 12

## சென்னையில் திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாக கமிட்டிக் கூட்டம்

### ஆக்க வேலைத் திட்டங்கள்

சென்னையில் 16-12-45ல் நடைபெற்ற திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாகக் கமிட்டிக்கூட்ட நிகழ்ச்சிகள்.

16-12-45ம் தேதி காலை 10-மணிக்கு சென்னை தங்கசாலைத்தெருவிலுள்ள கந்தசாமி கோவிலுக்கடுத்த சத்திரத்தில் நடைபெற்ற சென்னை மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாகக் கமிட்டிக்கூட்டத்திற்கு வந்திருந்த அங்கத்தினர்கள் வருமாறு:-

1. பெரியார் ஈ. வெ. ராமசாமி
2. வக்கீல் தி. பொ. வேதாசலம் பி. ஏ.,
3. ஆ. திராவிடமணி பி. ஏ.,
4. ராம. சுப்பையா
5. கு. பராங்குசம்
6. சி.என். அண்ணாதுரை எம்.ஏ,
7. என். அர்ச்சுனன்
8. பி. சண்முகவேலாயுதம்
9. எஸ். தருமாம்பாள்
10. ஆ. இராமாமிர்தத்தம்மாள்
11. கே. எஸ். சிவராமகிருஷ்ணன்
12. வி. சின்னதம்பி
13. எ. சித்தையன்
14. என். எம். சுப்ரமணியம்
15. கே. கோவிந்தசாமி
16. இ. திருநாவுக்கரசு
17. பி. சோமசுந்தரம்
18. பி. பொன்னுசாமி
19. சி. முனுசாமி
20. ரெ. சித்தாரெட்டி
21. ரோசு. அருணாசலம்
22. எஸ். நீதிமாணிக்கம்
23. குகை ஜெகதீசன்
24. எம். ஆர். சித்தையன்
25. என். வி. நடராசன்
26. என். நரசிம்மன் பி.ஏ.,
27. எம். ஆர். மத்திரன்
28. என். சங்கரன்

ஆகியோர் வந்திருந்தார்கள். மெம்பர்களைக்கொண்டு கமிட்டிக்கூட்டம் பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில் கூட்டப்பட்டவுடன், தோழர்கள் காரைக்குடி ராம. சுப்பையா, ஈரோடு பி. சண்முகவேலாயுதம், திருவாரூர் வி. ஜி. ரெங்கராசு. சேலம் ரோசு. அருணாசலம், திருச்சி என். சங்கரன், கடலூர் ஆ. திராவிடமணி ஜோலார்பேட்டை பார்த்தசாரதி, விழுப்புரம் கோவிந்தராசு ஆகியோர் நிர்வாகக் கமிட்டிக்கு சேர்ப்பு அங்கத்தினர்களாக சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள்.

நிர்வாகக் கமிட்டியின் இரண்டாவது தீர்மானமாக 1946ம் ஆண்டிற்கு நிர்வாக சபைக்குத் தலைவராக இருக்க திருச்சி தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ. அவர்களை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு தோழர் வி. சின்னதம்பியால் ஆமோதிக்கப்பட்டு எல்லா உறுப்பினர்களாலும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கழகத்திற்கு உபதலைவராக தோழர் பழயகோட்டை இளையபட்டக்காரர் என். அர்ச்சுனன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தோழர்கள் சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் பொதுக் காரியதரிசியாகவும், ஆ. திராவிடமணி பி.ஏ. அவர்கள் கூட்டுக்காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தோழர்கள் காரைக்குடி ராம. சுப்பையா, சென்னை என். வி. நடராசன் ஆகியோர் தமிழ்நாட்டு தற்கால அமைப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

நிர்வாகக்கமிட்டியிலிருந்து காரியக் கமிட்டியொன்றை கழக தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தெரிந்தெடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

நடப்பு ஆண்டுக்கு ஒரு வருட வேலைத்திட்டமாக அடியிற்கண்ட காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

(1) இவ்வருடம் கழகத்திற்கு ஒரு லட்சம் மெம்பர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(2) 50,000 ரூபாய் நிதி வசூலிக்க வேண்டும்.

(3) ஆந்திர மலையாள கர்நாடக மாகாணங்களில் பிரச்சாரம் செய்யவேண்டும்.

(4) சமுதாய சீர்திருத்த பிரசாரம் முக்கியமாகச் செய்யப்பட வேண்டும்.

(5) கழகத்திற்கு ஒரு கொடி ஏற்பாடு செய்யவேண்டும்.

(6) நகைச்சுவை அரசு என்.எஸ். கிருஷ்ணன், இசை உலக ஒப்பற்ற பாகவதர் இவர்கள் விடுதலைக்கு ஆவன செய்யவேண்டும்.

# தோழர் தி. பொ. வேதாசலம் வேண்டுகோள்

★

என் அருமைத் தோழர்காள்!

வணக்கம்.

நம் கழக விதிப்படி 1946ம் ஆண்டிற்கு என்னை நிர்வாக அங்கத்தினர், அக்குழுவின் தலைவனாகத் தேர்ந்து விட்டார்கள். அனுபவமும், அறிவுமில்லாத எனக்கு இது ஒரு பெரும் பணியேயாகும். என்னோடு இப்பெரும் பணியில் துணைகொள்ள பழங்குடியாளரும், பெருநிலக் கிழவரும் நம் மதிப்பிற்குரிய நண்பருமான தோழர் என். அர்ச்சுனன் அவர்களையும், எழுத்தாலும், சொல்லாலும், நடிப்பாலும் நம் மக்களை ஊக்கிவரும் திராவிடத்தின் அரும் புதல்வர் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்களையும் தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ. யையும் முறையே ஷை குழுவிற்கு உபதலைவராகவும், செயலாளராகவும் கூட்டுச்செயலாளராகவும் ஆக்கினது பெரிதும் வேண்டற்பாலது.

நாம் செய்யவேண்டிய பணிகள்:-

1. ஒரு லட்சம் அங்கத்தினர்கள் இவ்வாண்டில் சேர்ப்பது. அங்கத்தினர்கள் இவ்வாண்டு கையெழுத்திடுவதுடன் தங்கள் மனைவி, உறவினர் நண்பர்களைச் சேர்த்தாலே நம் எண்ணம் கைகூடும்.

2. ரூ. 50000 நிதி திரட்டுவது. வீண் செலவாக்கும் தொகைகளைத்திருப்பினால் போதும். சினிமாக்களிலும் பிராமண சிற்றுண்டி விடுதிகளிலும் செலவழிக்கும் பணத்தை நிறுத்தினால் போதும். இம்முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

3. கறுப்பு சட்டைப்படை. பெரியார் அவர்களின் நிர்வாகத்தில் இப்படை பணியாற்றும். பல்லாயிரக் கணக்கில் சேருக. நற்குணங்களையும், நற்செயல்களையும் மேற்கொள்க. மறந்தும் தவறு செய்ய வேண்டாம்.

திருச்சியில் தலைமைக்காரிய இடமாகவைக்கப்பட்டு எல்லாக் கடிதங்களும் அவைகட்குப் பதில் கொடுத்தலும், கணக்குகள் வைப்பதும் சகல வேலைகளும் கூட்டுச் செயலாளரால் பார்த்துக் கொள்ளப்படும். அடுத்த ஆண்டு வேறு தலைவர் நியமிக்கப் படும்போது அவர் ஊருக்கு காரிய இடம் செல்லும்.

வாரந்தோறும் இயக்கப்பத்திரிகைகள்மூலம் திராவிட மக்களின் நல்வாழ்க்கை கருதி தொழில், கல்வி, வாழ்க்கை குடும்பம் நடத்தல் பொருள் நிலை, உணவு, உடை, மதம் சமூகம் இவைகளைப்பற்றி பல கட்டுரைகள் எழுதி வெளியிடுவேன். இவையெல்லாம் என் அனுபவத்தால் கண்டவை. படித்து பயன் பெறுக. நம் அருமைத் தலைவர் பெரியார் அவர்கள் கட்டளைப்படியே நாம் யாவரும் நடக்க கடமைப்பட்டுள்ளோம். நம்மை குற்றம் சொன்னார்கள், ஒழுங்கில்லை, கணக்கில்லை, கிளைச்சங்கமில்லை, அங்கத்தினரில்லை, திட்டமில்லையென்று. இப்பொழுது சொல்லட்டும் நம்மிடத்தில் எது குறையென்று! திருத்திக்கொள்வோம். ஓர் ஆண்டு கழித்து நான் இப்பணியைவிட்டு நீங்குங்கால் கழக நிலை, தற்போதைய நிலையுடன் பலமடங்கு அதிகப்பட்டு, பெருஞ்செயலாற்றி, திராவிட மக்களைப்பெரிதும் விழிப்படையச் செய்திருக்கவேண்டுமென்பது என் எண்ணம். தங்கள் ஒத்துழைப்பாலும், கூட்டுறவாலும் முடியுமென்றே நினைக்கின்றேன்.

"என் கடன் பணி செய்வதே"

இப்படிக்கு
தங்கள் அருமைத்தோழனும்.
ஊழியனும்
தி. பொ. வேதாசலம்.

20-12-45.

---

(7) கறுப்பு சட்டைப்படையை சரிவர அமைத்து பயிற்சி அளிக்க வேண்டும்.

(8) கழக சம்மந்தமான முக்கிய நாட்கள் ஏற்பாடுசெய்து அடிக்கடி பொது மக்களைக் கொண்டாடும்படி செய்யவேண்டும்.

(9) இவைகளுக்கு வேண்டிய வேலைமுறைத் திட்டம், பட்ஜெட், முதலியவைகள் காரியக்கமிட்டியார் ஏற்பாடுசெய்து வேலை துவக்க வேண்டும்.

---

# திருமணங்கள்

நாகை கரையான் பிள்ளையார் சந்நிதியில் தோழர் எஸ். பி. கிருஷ்ணன் தலைமையில் 10-12-45ல் தோழர்கள் கோ. வைத்திலிங்கன்—காளியம்மை வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்று, தோழர்கள் டி. கே. விசயராகவலு பி. ஏ. பி. எல்., டி. பி. ஆறுமுகம், ஏ. கோவிந்தன் அம்மை நாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். குடி அரசுக்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

மதுரையில் தோழர் செந்தியப்ப நாடார் தலைமையில் 14-12-45 அன்று நடைபெற்ற தோழர்கள் காசிராஜன்—மரகதமணி வாழ்க்கை ஒப்பந்தத்தை முன்னிட்டு குடி அரசுக்கு 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

செம்பியமகாதேவியில் 14-12-45 காலை தோழர்கள் கீழையூர் கே. நடேசன்—அந்தனப் பேட்டை வ. பாரிஜாதம் ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் டி. என். இராஜாங்கம் தலைமையில் நடைபெற்று தோழர்கள் மகாதேவன், முத்துக்குமரன், தங்கவேல், வேதவல்லி அம்மையார், ஆறுமுகம் முதலியோர் பேசினார்கள். டி. என். லெட்சப்பா நன்றி கூறினார்.

---

## கவிஞர் பாரதிதாசன் நிதி

சென்னையில் 17—12—45ல் புதுவை புரட்சிக் கவிஞர் அவர்கட்கு நிதிதிரட்டும் நாமக்கல் கமிட்டியின் கூட்டம் ஷைகமிட்டித் தலைவர் தோழர் என். கிருஷ்ணராஜு தலைமையில் நடைபெற்றது. அங்கத்தினர் பலரும் வந்திருந்தனர்.

கமிட்டிக்குச் சில உறுப்பினர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

வரும் ஏப்ரல் மாதத்தில் கவிஞரின் 55-வது ஆண்டு பூர்த்தியடைவதால் அந்த நாளில் நிதியளிக்கப்படும்.

ப. முத்தையா,
பாரதிதாசன் நிதிக் கமிட்டி,
சென்னை கிளை 59, பிராட்வே,
சென்னை.

நிதி அனுப்புவோர் ஷை முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

# சென்னை மாவட்ட 6-வது சுயமரியாதை மாநாட்டு நிகழ்ச்சிகள்

★

சென்னையில் டிசம்பர் 15-ஆம் தேதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு மாநாடு, தன்மதிப்பியக்கப் பாடல்களுடன் செண்ட் மேரீஸ் மண்டபத்தில் சிறப்பாகத் தொடங்கிற்று.

தோழர் எம். எஸ். முத்து வரவேற்புரை நிகழ்த்தினார். வரவேற்புத் தலைவர் முன்மொழிய, தோழர்கள் டி. பி. வேதாசலம், இராமாமிர்தம் அம்மையார், கே. கோவிந்தசாமி ஆகியோர் பின் மொழிய குடந்தைத் தோழர் வி. சின்னதம்பி தலைமை தாங்கி, உணர்ச்சிமிக்க தலைமைப் பேருரையாற்றினார்.

தோழர்கள் ஜனார்த்தனம், நெடுஞ்செழியன் 'நம் நாடு', 'எது கலை' என்பனபற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு 'பாலு ஸ்டோர்ஸ்' உரிமையாளர் தோழர் பாலசுந்தரம், சென்னை நகர திராவிட மாணவர் சார்பில் தோழர் பழனி கனக சபாபதி முதலியோர் கறுப்புத்துணி மாலைகளை அணிவித்தார்கள். பரங்கிமலை, ஆதம்பாக்கம் பகுத்தறிவு இளைஞர் கழகத்தார், கைத்தடியொன்றை அன்பளிப்பாக அளித்தனர். பெரியார் அவர்கள் தமது பேருரையில் வாலிப வீரர்களை, அடுத்த போராட்டத்திற்குத் தயாராகும்படி வேண்டிக் கொண்டார்கள்.

தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., 'மறுமலர்ச்சி' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார். தோழர் எஸ். ரஜேந்திரன், சென்னை திராவிடர் (ஜஸ்டிஸ் கட்சி) கழகத்தாருடைய வரவேற்புரையை வாசித்துத் தலைவர் தோழர் வி. சின்னதம்பி அவர்களுக்கு அளித்தார்.

திருச்சியில் கூடிய 4-வது மாகாணச் சுயமரியாதை மாநாட்டின் தீர்மானங்களை, இம்மாநாடு அப்படியே ஏற்றுக்கொள்வதாகவும், நகைச்சுவை ப்ரசார் தோழர் என். எஸ். கிருஷ்ணன், இசையுலக ஒளி தோழர் எம். கே. தியாகராஜ பாகவதர் ஆகிய [illegible] இரு கலைச் செல்வர்கள் பால் கருணைகாட்டி, அவர்களை விடுதலை செய்யுமாறு கவர்னரையும், வைசிராயையும் கேட்டுக்கொள்வதாகவும், கோயில்களிலும் மடங்களிலும் முடங்கிக்கிடக்கும் பெரும் செல்வம், அறிவுக்கொவ்வாத வீண் துறைகளில் செலவு செய்யப்படுவதை நிறுத்தி, அச்செல்வத்தை இந்துமத தர்ம பரிபாலன போர்டாரின் நிர்வாகத்தில் கொண்டுவந்து மக்கள் மனதையும் உடலையும் பகுத்தறிவுக்கொத்த துறையில் பண்படுத்தும் வகையில் செலவு செய்யுமாறு அரசியலாளருக்கு அறிவுறுத்துவதாகவும், மடங்களை எண்டோமெண்ட் போர்டில் சேர்க்கக்கூடாதென்று பார்ப்பனர்களும் மடத்தால் பயன் பெறுகிறவர்களும் போடும் கூச்சல்களை சர்க்கார் பொருட்படுத்தக் கூடாதென்று கேட்டுக் கொள்வதாகவும், அரசியல் பாடத்திட்டக் கமிட்டியார், மாணவர்களுக்கென வகுத்துள்ள போதனா முறைத் திட்டத்தில் (Syllabus) மத சம்மந்தமான பகுதிகளைச் சேர்ப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், இனிமேல், பாடபுத்தகங்களில் மதக்கல்வியைப் புகுத்தாமலிருக்குமாறு அரசியலாருக்கு அறிவுறுத்துவதாகவும், அகில இந்திய ரேடியோவில் புராணப் பிரசங்கங்களுக்கும் பண்டிதைகளுக்கும் முதலிடம் கொடுத்து அறிவுக்கொவ்வாத விஷயங்களை மக்களிடைப் பரப்பி, மக்கள் அறிவைப் பாழ்படுத்தி வருவதையும், திராவிடர் கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றின் நடவடிக்கைகளைப்பற்றிய செய்திகளை அடியோடு விட்டுவிட்டு, ஒருதலைப் பட்சமாகப் பிறசெய்திகளை மட்டுமே கூறிவருவதையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், இனிமேல் மக்களுக்குப் பகுத்தறிவைப் போதிக்கும் விஷயங்களைப் பிரச்சாரம் செய்யவும் பாரபட்சமின்றி செய்திவிடவும் வேண்டுமென்று அ. இ. ரேடியோ அதிகாரியைத் தூண்டுவதாகவும், சுயமரியாதை இயக்கத்தின் மத்திய நிலை [illegible] அமைக்க வேண்டுமென்று தலைவரைக் கேட்டுக்கொள்வதாகவும், சுயமரியாதைத் திருமணங்கள் செய்துகொள்ளும் தம்பதிகள் முதலில் பதிவு செய்து கொண்டு, அதன்மூலம் ஒரே கட்டுப்பாடான முறையில் திருமணங்களை அமைத்துக்கொள்ள வேண்டுமென்றும், ஆரியக் கலப்பற்ற முறையில் மறுமணத்தையும் கலப்பு மணத்தையும் நடைமுறையில் கொணர்ந்து அதன் மூலம் சாதிகளை ஒழித்துக் கட்ட முன்வரவேண்டுமென்றும், ஒரே வகுப்பில் திருமணம் செய்துகொள்ளும் வழக்கத்தைக் கைவிட்டு, கலப்பு மணமே செய்துகொள்வதென்று உறுதி செய்துகொள்ள வேண்டுமென்றும் சுயமரியாதைக்காரர்களை கேட்டுக்கொள்வதாகவும், மதத்தின் பெயரைக் கூறிக்கொண்டு, மடாதிபதிகளாகவும், சங்கராச்சாரிகளாகவும், ஜீயர்களாகவுமிருப்பவர் பல்லக்குகளில் ஏறிக்கொண்டு, ஆட்கள்மீது சவாரிசெய்யும் அநாகரீக வழக்கத்தை வன்மையாகக் கண்டித்து இவற்றையெல்லாம் சட்டத்தின் மூலம் தடைசெய்துவிட வேண்டுமென்று அரசியலாரைத் தூண்டுவதாகவும், ஆந்திர பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவாற்றிய தோழர் பணிக்கர் அவர்கள், வர்ணாசிரம தர்மத்தையும், மதத்தின் பெயரால் மக்கள் சுரண்டப்படுவதையும், அறியாமையில் ஆழ்த்தப்பட்டு வருவதையும் கண்டித்துப் பேசியிருப்பதைப் பாராட்டுவதுடன், இனிமேல், பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவாற்றப்போகும் தலைவர்கள் தோழர் சர்தார் பணிக்கர் அவர்களைப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும், தீர்மானங்கள் நிறைவேறின.

---

## அண்ணாமலை நகரில் கருணை!

19-12-45 அண்ணாமலை நகரில் தோழர் இரா. நல்லபாணி தலைமையில் பாகவதர் கிருஷ்ணன் விடுதலை வேண்டுகோள் கூட்டம் மாணவர் சார்பாக நடைபெற்றது. தோழர் அமிர்தலிங்கம் கொண்டுவந்த 'கருணை காட்டுக' என்ற தீர்மானம் தோழர் [illegible] வழிமொழிய [illegible] அனுப்பப்பட்டது.

## திராவிடர் கொண்டாட வேண்டிய நாட்கள்

சென்னை திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் திராவிடர் கொண்டாடுவதற்கென முக்கிய நாட்கள் சில குறிப்பிடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனையொட்டி கீழ்க்கண்ட நாட்களைத் திராவிடர் நாட்களாகக் கொண்டாடலாமென்ற எண்ணத்தைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன், திராவிடம் ஏற்குமென்ற காரணத்தால்!

நாடெங்கும் உள்ள கழகங்களும், தோழர்களும் இதனை ஆதரித்து தங்கள் விருப்பங்களை திராவிடர் கழக மத்திய காரியாலயத்திற்கும், 'குடி அரசு'க்கும் அனுப்பிவைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, இதனை சமர்ப்பிக்கிறேன்.

தங்களன்புள்ள,
மு. கருணாநிதி.

நாட்கள்

1. பெரியார் பிறந்த நாள்
2. பொங்கற் புத்தாண்டு நாள்
3. திராவிட நாட்டு விடுதலைக் கிளர்ச்சி நாள்
4. கொடி வணக்க நாள்
5. கருப்பு சட்டைப்படை அணி வகுப்பு நாள்
6. சேலம் புரட்சி நாள்
7. இந்தி ஒழிந்த நாள்
8. ரயில்வே ஹோட்டல் சாதி பேத ஒழிப்பு நாள்
9. தியாகர், நாயர், பனகல் நினைவு நாள்
10. செல்வம் நினைவு நாள்
11. நாகம்மையார் நினைவு நாள்
12. தாலமுத்து நடராசன் நினைவு நாள்

குறிப்பு:- தற்காலிகமாக இந்த ஆண்டுக்கு "தேர்தல் பகிஷ்கார நாள்" கொண்டாடலாம்,

## முதல் திட்டம்

திராவிடர் கழகத்திற்குப் புது வருட வேலைத்திட்டமாக, திராவிடர் கழக அங்கத்தினர்கள் 1946 ஜனவரி 1ந் தேதியிலிருந்து கழக அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் அவரவர்கள் சொந்தத்தன்மையில் அனுசரிக்க வேண்டிய திட்டங்களாவன:—

1. மதக்குறியை அணியாதிருத்தல்.

2. சாதிப் பட்டங்களைத் தங்கள் பெயர்களோடு சேர்க்காதிருத்தல்.


3, 4.........தோழர்களே! இந்த இரண்டையும் நீங்கள் செய்து முடித்துவிட்டால் அடுத்த திட்டம் தெரிவிக்கப்படும்.

ஆச்சுதா? எங்கே பார்க்கலாம்!

## மறைவு

காவேரிப்பட்டணம் தோழர் பி. என். வேணுகோபால் நாயுடு அவர்கள் இயற்கை எய்தியது குறித்து வருந்துகிறோம்.


உடலைச் சிங்காரித்தாய்! உயிருக்கு என் செய்தாய்?
முதலில் குடலைக்காப்பதே முக்கியம்



ஜெயராம்
காயசுத்தி லேகியம்

தலைவலி, மயக்கம், வாந்தி, பிரட்டல், புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், நெஞ்சுவலி, விலா முதுகுபக்கம் வலி, தீராத வயிற்று வலி, இடுப்புவலி, குடல் வாதம், மூல நோய், மலச்சிக்கல், கிரிமிகளின் உபாதை இவைகளைப் போக்கி மலத்தைச் சுகமாய்ப் பிரிக்கும். இரண்டே வேளையில் குணம்.

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0.
தபால்கூலி தனி.

ஜெயராம் வைத்தியசாலை,
28, ஜர்சின்ஸ்வாதர் கீழ்வீதி, கும்பகோணம்.



போரில் வெற்றி!
எனவே
சமாதான கால தேவைகளிலும்
வெற்றி வேண்டும்.
ஆகையால்

குரு மருந்துகள்

இனி உங்கள் தேவைக்குக் கிடைக்கலாம்.

முக்கிய தயாரிப்புகள்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| குரு தைலம் (210 வியாதிகளுக்கு) | 1—8—0 |
| குரு பல்பொடி (தந்தரோகங்களுக்கும்) | 0—5—0 |
| குரு களிம்பு (புத்து, படைகளுக்கு) | 0–14—0 |
| குரு ஆயுள்வேத லேகியம் | 2—0—0 |
| குரு ஆஸ்த்மா டிராப்ஸ் (இருமல் காசங்களுக்கு) | 2—0—0 |
| குரு தாதுவிருத்தி மருந்து (வாலிப-வயோதிகர்களுக்கும்) | 5—0—0 |
| குரு சந்தான சோர்ணம் (ஸ்திரிகள் சகல கர்ப்ப நோய்களுக்கும்) | 5—0—0 |
| குரு குழந்தை செட் (CHILDREN SET) (குழந்தைநோய்-பாதுகாப்புக்கும்) | 8–10—0 |

குரு மருந்துகள்
குடும்ப பொக்கிஷம்
உங்கள் ஊர் மருந்து—
ஷாப்கடைகளில் கேளுங்கள்.
இல்லாவிடில்
டாக்டர்
எ. மதுரம் சன்ஸ்,
குரு மருந்து சாலை..........
திருச்சிராப்பள்ளி (S. I.)


நூலக முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## நடக்க இருப்பவை!

● 3-1-46 மாலை 5மணிக்கு நீடாமங்கலம் திராவிட மாணவர் கழகத்தின் சார்பாக நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஈ. வி. கே, சம்பத், சனார்த்தனம் எம் ஏ., இரெ. இளம்வழுதி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

● 6-1-46ல் திருத்துறைப்பூண்டியில் பிற்பகல் 1-மணிக்கு (மாணவர் மாநாடு முடிந்தவுடன்) மாகாண மாணவர் மாநாட்டு செயற்குழுவின் ஆலோசனைக்கூட்டம் நடைபெறுமென்றும், அங்கத்தினர்கள் அனைவரும் வருகை தருமாயும் செயலாளர் தோழர் இளம்வழுதி வேண்டுகிறார்.

● 30-12-45ல் வாணியம்பாடி சந்தை மைதானத்தில் தோழர் என். சிவராஜ் தலைமையில் திருப்பத்தூர் தாலுக்கா தாழ்த்தப்பட்டோர் மாநாடு நடைபெறும்.

● 30-12-45 மாலை 5-மணிக்கு திண்டுக்கல் தாடிக்கொம்புரோடு எல். வி. எஸ். தரகு மண்டி வாணிப நிலையத்தில் திராவிடர் கழக காரியக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். அனைவரும் வருக.

● 30-12-45 மாலை 6மணிக்கு திருச்சி கருணாநிதி தோட்டத்தில் தோழர் என். சங்கரன் தலைமையில், திராவி ர் கழக நிர்வாகக் கமிட்டி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தோழர் டி. பி. வேதாசலம் அவர்கட்கு ஒரு பாராட்டுக்கூட்டம் நடைபெறும்.

● 5-1-46 மாலை 5-மணிக்கு தோழர் டி. பி. வேதாசலம் தலைமையில் வழிநடையூர் திராவிடர் கழக திறப்பு விழா நடைபெறும்.

● 6-1-46 மாலை 3-30 மணிக்கு 'தி சிட்டி அமைச்சூர்ஸ்' பேரவைக் கூட்டம் திருச்சி கழக கட்டிடத்தில் நடைபெறும்.

● 6-1-46 நன்னிமங்கலம் திராவிட வாலிபர் கழக சார்பாக ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். பல தோழர்கள் கலந்துகொள்வார்கள்.

● 30-12-45 காலை 9 மணிக்கு குளித்தலை மணத்தட்டை கிராமத்தில் தோழர் எம். சிங்காரம் தலைமையில் குளித்தலை தாலூகா ஷெடியூல்டு வகுப்பு முதலாவது மாநாடு நடைபெறும்.

● 1-1-46 செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு வட சென்னை சௌராஷ்டிர பிராமணரல்லாதார் வாலிபர் சங்க ஆதரவில் சக்கல் ... த்தில் பிரசாரக் கமிட்டி ஒன்று அமைக்கப்படும். அனைவரும் வருக.

● 1-1-46 மாலை 6மணிக்கு திருச்சி கருணாநிதி பார்க்கில் திருச்சி மாவட்ட திராவிட வாலிபர் இயசக வேலைத்திட்ட மாநாட்டு அமைப்புக் கூட்டம் நடைபெறும் என தோழர்கள் எஸ். நெடுமாரன், பி. எஸ். கணபதி அறிவிக்கின்றனர்.

● 1-1-46 மாலை 5மணிக்கு தாராசுரம் தோழர் என். எஸ். வாசனின் தாயார் மீனாட்சி அம்மாளின் இறுதிக்கடனும், படத்திறப்பு பொதுக் கூட்டமும் தோழர் ஆர். எஸ். பி. ராமையா தலைமையில் நடைபெறும்.

● 6-1-46 மாலை 4-மணிக்கு சென்னை பார்க் டவுன் பொம்முசெட்டித் தெரு 11-வது மாடியில் சென்னை ஜில்லா திராவிடர் பெடரேஷன், சென்னை ஜில்லா சுயமரியாதைச் சங்கம் இவைகளின் 1946ம் ஆண்டின் நிர்வாகக்கமிட்டித் தேர்தல் நடைபெறும். வருக தோழரே!

## ஈரோட்டில் கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை வேண்டுகோள்!

26-12-45ந் தேதி மாலை 6மணிக்கு பழயகோட்டை இளையபட்டக்காரர் தோழர் எ . அர்ச்சுனன் அ . . தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. 'கருணை—ாட்டு' என்ற தீர்மானத்தை தோழர் பி. சண்முகவேலாயுதம் அவர்கள் பிரேரேபிக்க அதை ஆதரித்து பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள், தோழர்களான நடிகர் நாராயணன், எம். ஆர். பெருமாள் எம்.எ.,எல்.டி., மு. கருணாநிதி, எஸ். தவமணிராசன் மதுரை முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்தாருக்கும் அனுப்பப்பட்டது.

---

சென்னையில் 16-12-45ல் நடைபெற்ற திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டத்திற்கு வர இயலாமைக்கு வருந்துவதாகவும், நிறைவேற்றும் தீர்மானங்களை ஏற்றுக் கொள்வதாகவும், நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களான தோழர்கள் எம். கே. ராமசாமி, எஸ். எஸ். பழனிசாமி, கே. ராஜசேகரன், கே. நமசிவாயம், கே. ஐ. சுக்குனி ஆகியோர் கடிதங்கள் எழுதியுள்ளனர்.

கடல்கடந்த நாடுகளில் குடியேறும்வேலை—வெற்றிக்காக போரிடுவதைவிட மிகக் கடினமாக இருக்கும்.

# மே. த. கவர்னரின்

சௌகரியங்கள்—கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு மென்மேலும் நன்கொடை கொடுத்துதவுமாறு உருக்கமாக வேண்டுகோள் விடுகிறது.

ஏனென்றால்

இந்திய, பிரிட்டிஷ் துருப்புகளுக்கு சௌகரியங்கள் மிகமிக அவசியமாக தேவைப்படுகின்றன.

★

எனவே

ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள், கஷ்ட நிவாரண சகாயநிதி, C/O இம்பீரியல் பாங்க், இந்தியா முதல் லைன் பீச், சென்னை, என்ற விலாசத்துக்கு தயவு செய்து பணம் அனுப்பி கொடுக்கவும்.

# குடி அரசு

1945௵ டிசம்பர்௴ 29௳


## திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி

இம்மாதம் 16௳ சென்னையில் திராவிடர் கழக நிர்வாக கமிட்டிக் கூட்டம் நடந்ததின் நிகழ்ச்சிகள் தலைப்பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

கழகத்திற்கு நடைமுதல் வருடத்திற்கு நிர்வாக சபைத் தலைவராக திருச்சி தோழர் தி. பொ. வேதாசலம் பி. ஏ., அவர்களும் உபதலைவராக பழயகோட்டை இளையபட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்களும், பொதுக்காரியதரிசியாக தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்களும் காரியாலய காரியங்களை கவனிக்கவும், முழுநேர காரியம் பார்க்கவும், கூட்டுக்காரியதரிசியாக கடலூர் தோழர் ஆ. திராவிடமணி பி.ஏ., அவர்களும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

தோழர் வேதாசலம் அவர்களைப்பற்றி தமிழ்நாடு நன்கு அறியும். முதலாவது அவர் இயக்கத்தினால் சுயநலமோ தற்பெருமையோ,விளம்பரமோ விரும்பாதவர்; இதுவரை பெறாதவருமாவார். மிக்க ஒழுக்கமுடையவர், பயந்தவர், இந்தக் காரணங்களே அவர் நிர்வாகசபை தலைமைப் பதவிக்குத் தகுந்தவர் என்று பெரியாரை கருதும்படியாகச் செய்தது என்று சொல்லுவோம். இயக்கத்தின் பேரால் வாழ்க்கைநடத்த வேண்டிய அவசியமோ இயக்கத்தை வாழ்க்கை மேன்மைக்குப்படிக்கட்டாக உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியமோ அவருக்கு இல்லை என்றே கருதலாம்.

ஆகவே அப்படிப்பட்ட ஒருவரின் தொண்டு இயக்கத்திற்கு கிடைத்தது குறித்து இயக்கம் பாராட்டப்பட வேண்டியதேயாகும். அவரது தலைமையின் கீழ் நிர்வாகக்கமிட்டி இவ்வருடம் நல்ல தொண்டாற்றுமென்றும், இயக்க அன்பர்கள் அவருக்கு அப்பதவியை பயனுள்ளதாகச் செய்வதற்கு ஆதரவளிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

நிர்வாகக் குழுவின் உபதலைவர் தோழர் அர்ச்சுனன் அவர்கள் பெருநிலக்கிழவர், கொங்கு வேளாள சமூகத்தலைவரும்நீதி பதியுமான பழயகோட்டைப் பட்டக்காரரின் தம்பியரும் இளைய பட்டக்காரருமாவார்.

அன்றியும் காங்கரசில் முக்கிய தலைவர்களில் ஒருவரும் அண்மையில் கோவை ஜில்லாவின் சார்பாய் மத்திய சட்டசபைக்குப் போட்டியின்றி தெரிந்தெடுக்கப்பட்ட தோழர் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்களின் மாப்பிள்ளையுமாவார். இப்படிப்பட்ட இவர் இயக்கக் கொள்கைக்காகவும், தனது சமுதாய மக்கள் மூட நம்பிக்கையில்இருந்தும்தேசியப் புரட்டிலிருந்தும் விழிப்படைய வேண்டும்என்பதற்காகதொண்டாற்றுவதற்கும் ஆகவே நமது இயக்கத்தில் பங்கு கொள்ள இசைந்து முன்வந்திருக்கிறார். சிறிதும் தற்பெருமையின்றியும் இயக்கத்தால் தமக்கு எவ்வித சுயநல எதிர்பார்ப்பின்றியும் உண்மைத் தொண்டாற்றவே கிடைத்த பேற்றை, நம் இயக்கம் பெற்றமைக்கு திராவிட கழகம் பாராட்டப்படவேண்டியதேயாகும்.

செயலாளர்களாக தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., பொதுச்செயலாளராகவும், தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ., நிர்வாக காரியாலய முழுநேரச் செயலாளராகவும் அமைந்ததும் பாராட்டற்குரியதாகும்.

அறிவு ஆற்றலுமிக்க இவர்கள் காலத்தில் இயக்கப்பிரசாரமும், இயக்க காரியாலய காரியமும் மிக்க மேம்பாடாக நடைபெறப்போகிறது என்பதில் ஐயமில்லை.

அமைப்பாளராக தோழர்கள் சென்னை என். வி. நடராசன், காரைக்குடி ராமசுப்பய்யா அவர்கள் நியமனம் பெற்று இருப்பதால் தமிழ்நாடு முழுவதும் தக்க அமைப்பும் கிளைச் சங்கங்களும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

பொதுவாகவேதிராவிடர் கழகத்தில் இனி சிறிது ஆண்டுகளுக்கு நமக்கு நிர்மாணவேலைகளே செய்யவேண்டி இருப்பதாலும், கட்சிக்குள் தொல்லைகள், தேர்தல் பதவிவேட்டைகள் முதலானவைகளில் ஈடுபடவேண்டிய அவசியம் இல்லாமலிருக்கிறபடியாலும் சுயநல-சமய சஞ்சீவிகளுக்கு நம் கழகத்தில் வேலையில்லாமல் போவதோடு எவ்விதப் பூசல்களும் ஏற்பட இடமில்லாமல் தொடர்ச்சியாகவும் தீவிரமாகவும் சரியான அமைப்புஒழுங்குமுறை கட்டுப்பாடுடனும் இயக்கவேலைகள் நடக்கக்கூடும் என்று எவரும் எதிர்பார்க்கலாம்.

நடை முதல் வருஷத்திற்கு ஒருவருஷத்திட்டமாகசென்னை நிர்வாக கமிட்டி 8திட்டங்களை வகுத்துக் கொடுத்திருக்கிறது.

1. கழ்கத்திற்கு ஒரு லட்சம் அங்கத்தினர்கள் சேர்ப்பது,

2. கழகத்திற்கு 50,000 ஐம்பது ஆயிரம் ரூபாய் நிதி திரட்டுவது,

3. ஆந்திரா, கர்னாடக,

கேரள நாடுகளில் திராவிடர் கழக பிரசாரம் செய்வது.

4. சமுதாய சீர்திருத்தப் பிரசாரத்தை முக்கியமாய் மக்களிடை செய்வது,

5. கருப்பு சட்டைப் படையை பலமாக ஒரு பெரும் படை தயாரிப்பது,

6. கழக சம்மந்தமான நாட்கள் ஆங்காங்கும் கழகந்தோறும் கொண்டாடச் செய்ய வேண்டியது.

7. கழகத்திற்கு ஒரு கொடி ஏற்படுத்தி அதை முக்கியப் படுத்துவது,

8. திராவிடமணிகளான என். எஸ். கிருஷ்ணன், பாகவதர் ஆகியவர்களை சிறையினின்றும் விடுவிக்க வேண்டுவன செய்யவேண்டுவது.

ஆகிய இந்த எட்டு காரியங்கள் இந்த 1946ம் ஆண்டில் முக்கியமாகச் செய்யவேண்டியதாக திட்டமிடப்பட்டிருக்கிறது.

இத்துடன் மற்றொரு முக்கிய விஷயமும் ஆலோசித்து முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அது என்னவெனில் இயக்கத்திற்கு ஒரு தமிழ் தினசரி பத்திரிகை துவக்கப்படவேண்டியது என்பதாகும். இந்த விஷயம் ஆலோசனைக்கு வந்தவுடன் பெரியார் தன்னால் இனி அதற்கு முன்மாதிரி காரிய நிர்வாகம்செய்ய தனக்கு சக்தி இல்லை என்றும், யாராவது முன்வந்தால் அவர்களுக்குத் தக்க பொறுப்பின்மீது தனது அச்சுயந்திரசாமான்கள் பயன்படுத்திக்கொள்ள உதவுவதாகவும் சொன்னதோடு, பத்திரிகை நடத்த முன் வருபவர்கள் குறைந்தது ஒருவருட காலத்துக்காவது மாதம் 1க்கு ரூ. 2000 நஷ்டத்தைத் தாங்கும்படியான வசதிபெறவேண்டியது முக்கியம் என்றும் சொன்னார்.

உடனே பலதோழர்கள் முன் வந்து தினசரி நடப்பதானால் ஜில்லா ஒன்றுக்குரூ.1000, 2000 வசூலிக்க முடியுமென்றும், சிலர் இப்போதே 1000, 500 நன்கொடை கொடுப்பதாகவும், பெரியாரே முன்னின்று துவக்கிக்கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். இதைப் பற்றிக் கவனிப்பதாகவும், ஜனவரியிலேயே ஒரு கமிட்டி போட்டு அவர்கள் வசம் இம்முயற்சியை ஒப்புவித்து தன்னால் கூடிய உதவியை அக்கமிட்டிக்கு செய்வதாகவும் சொன்னார். இதன்மீது இரண்டொரு நண்பர்கள் தங்கள் தற்கால வேலையைவிட்டு, இதற்கு ஆக வந்து உழைப்பதாகத் தெரிவித்து இருப்பதாகத் தெரிகிறது. எனவே நமது இயக்கப் பிரசாரத்திற்கு ஒரு தமிழ் தினசரி ஏற்படலாம்.

எப்பொழுதுமே பத்திரிகைகள் எந்த இயக்கத்திற்கும் தனிப்பட்ட நபர்கள் உரிமையில் நடப்பதுதான் சரியே தவிர, கட்சி பொதுவில் அல்லது பலரது ஆதிக்கத்தில் நடப்பது என்பது நடக்கக்கூடியதாகவோ நல்ல பலன் அளிக்கக் கூடியதாகவோ இருப்பதில்லை என்பது நமது அபிப்பிராயம். உதாரணமாக ஜஸ்டிஸ் கட்சிக்கு கட்சிநிதியில் பத்திரிகை ஆரம்பித்து எவ்வளவோ லட்ச ரூபாய்கள் பத்திரிகை விழுங்கி இருந்தும் அவைகள் (பத்திரிகாலய சாமான்கள்,கட்டிடங்கள்) ஏலம் போகவும் விற்றுக் கடனடைக்கவும்தான் ஆளாயிற்றே ஒழிய நல்ல நிலையில் வாழ்ந்த நாள் அரிதாகும்.

அப் பத்திரிகைகளின் நடப்பு கூட கட்சிக்குள் கலகமும் உள் கட்சியும் எதிர்ப்பும் ஏற்படக் காரணமாகவும் இருந்தன. அக்காலத்தில் மந்திரிகள் மாதம் 1000 ரூபாய் போல் கொடுத்தும், கட்சி சார்பாய் நியமனம்பெற்ற கவர்னர் நிர்வாகசபை மெம்பர்கள் மாதம்500வீதம் கொடுத்துவந்தும், ஜமீன்தார்கள் ஜில்லாபோர்டு தலைவாகள் சேர்மென்கள் மற்றும் பலர் கட்சிக்கு 10-ஆயிரம் 20-ஆயிரம் கொடுத்துவந்தும், இவ்வளவும் போதாமல் நாயர் மெமோரியல் பண்டு 30, 40 ஆயிரம் ரூபாயையும் பத்திரிகை சாப்பிட்டதோடு 2-லட்சம் பெறும்படியான நாயர் தியாகராயர் ஞாபகச்சின்ன கட்டிடம் 70-ஆயிரம் ரூபாய்க்கு விற்றுக் கடனடைக்க வேண்டியதாயிற்று. திராவிடன் பத்திரிகைக்கு பெரியார் ஈ. வெ. ரா. தலை கொடுத்ததற்கு ரூ. 10000 போல் தெண்டம் அடைந்து பல தொல்லைப்பட்டு கடன் தீர்க்க வேண்டியதாயிற்று. பொப்பிலி ராஜா தலை கொடுத்ததற்கு அவர் மீதும் பத்திரிகை கடனுக்கு நோட்டீஸ்களும் டிக்கிரிகளும் நிறைவேற்றப்படவேண்டியதாயிற்று என்பதோடு மிஷின்கள் விற்றும் சொந்தத்தில் கொடுத்தும் கடன்கள் தீர்க்கப்படவேண்டியதாயிற்று. இவைகளுக்கு காரணம் கட்சியின் பேரால் கட்சியாளர்கள் பொதுவில் பத்திரிகை நடத்தப்பட்டதேயாகும்.

ஆதலால் கட்சிக்கு ஆக நடக்கும் பத்திரிகை ஒரு மனிதன் சொந்த உரிமையில் நடக்க வேண்டுமே ஒழிய (கட்சியாளர்கள்) இருவர் உரிமையில் நடப்பதுகூட ஆபத்தேயாகும்.

அந்தப்படி நடத்த நம்பிக்கையுள்ள தனிப்பட்ட ஆட்கள் கட்சியில் இல்லாவிட்டால் அக்கட்சியின் ஈன நிலைமைக்கு அதை ஒரு உதாரணமாகக் கொள்ள வேண்டுமே ஒழிய அதற்குஆக பொதுவில் பத்திரிகை நடத்துவது என்பது பயப்படவேண்டியது என்றே கூறுவோம். ஏனெனில் ஒருவன் நடத்துவதில் தவறோ மோசமோ ஏற்பட்டால்

கட்சிக்கு நட்டமோ தடையோ ஏற்பட்டு விடாது. கட்சியாளர்கள் பலர் நடத்துவதில் தவறோ மோசமோ வந்து விட்டால் பழைய ஜஸ்டிஸ் கட்சி போல் உள் கலகம், வெளியார் சிரிப்பு, மக்களுக்குள் கட்சி ஆகியவை ஏற்பட்டு இயக்கத்திற்கே கேடாவது தடையாவது ஏற்பட்டே தீரும். இதற்கு மற்றும் பல அனுபவங்கள் உண்டு. ஆகவே பத்திரிகை நடப்பதானால் தோழர்கள், கட்சி அன்பர்கள் நம்பிக்கை கொண்டு உண்மையானவர்களுக்கு பத்திரிகைக்கு ஆக உதவி செய்யவேண்டுமே தவிர, கட்சியாரால் நடத்த முயற்சிப்பது வெற்றிதராது என்று கூறுவோம்.

அடுத்தபடியாக பிரசாரத்திற்கு ஆக சுற்றுப்பிரயாணம் செய்ய ஒரு திட்டம் யோசித்து முடிவுசெய்து, அதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளும்படி பெரியார் வேண்டிக் கொண்டார்.

5-வருடகால சுற்றுப்பிரயாணத்திட்டம்,

ஒரு நல்ல மோட்டார்கார் 5000 ரூபாய் விலையில் வாங்குவதென்றும், அதற்கு 5-வருடத்துக்கு டிரைவர்சம்பளம் மாதம் ரூ. 50 விதம் 3000 ரூபாயும், ரிபேர் டையர் முதலியவை வருடம் ரூ. 400 விதம் 2000 ரூபாயும், எண்ணைச் செலவு வருடம் ரூ. 1000 விதம் 5000 ரூபாயும் ஆக 5-வருடத்துக்கு 15000 ரூபாய்க்குள் அடங்கும்படி திட்டம் போடப்பட்டது.

இதற்கும்பல தோழர்கள் முன் வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் கறுப்பு சட்டைப் படை விஷயமாகவும் பல கருத்துக்கள் கொண்ட திட்டம் போட்டு இது பெரிதும் பெரியார் கருத்துப்படி நடக்க விட வேண்டும் என்றும் பேசப்பட்டது. ஆகவே இந்தப்படி பல திட்டங்கள் இந்த நிர்வாகசபைக்கூட்டத்தில் நிறைவேற்றப் பெற்றன.

இந்தக்காரியங்கள் எல்லாம் ஏறக்குறைய மேற்குறிப்பிட்ட ரூ. 50,000 நிதி வசூல் திட்டத்தின் மூலமே நடைபெற வேண்டியதென்று எதிர்பார்ப்பது தவறாகாது.

ஆகவே நிதி வசூல் குறித்து அடுத்தவாரம் விளக்குவோம்.

---

## நெசவாளர் கஷ்டம்

நாட்டில் நெசவுத்தொழிலாளருக்கு பெரியதோர் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நூல் கண்ட்ரோலின் தாண்டவத்தால் ஒவ்வொரு நெசவாளருக்கும் ஒரு மாதத்தில் ஏழுஎட்டு நாட்களுக்கே வேலையிருப்பதில்லை. இந்தக் கண்ட்ரோல் முறையை மாற்றும்படி பல இடங்களிலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். நூல் கண்ட்ரோல் அதிகாரம் ஒரு பார்ப்பனர் கையில் இருப்பதும், நெசவாளர் தமிழர்களாயிருப்பதும் இந்தத் தொந்திரவுக்குக் காரணமாகும். அந்தப் பார்ப்பனத் தோழருக்குப்பதிலாக ஒரு தமிழ் அதிகாரியை ஏற்படுத்தி நெசவாளர்களுடையதுன்பத்தை நீக்க சென்னை கவர்னர் அவர்கள் முன்வர வேண்டுமாய்க்கோருகிறோம். கவர்னர் அவர்கள் இதைக்கவனித்து உடனே ஆவன செய்ய வேண்டியது அவசியமாகும்.

---

## வேண்டுகோள்

பெரியார் ஈ. வெ. ரா. ஜனவரி மாதத்தில் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார். மூன்று ஜில்லா திராவிடர் கழக நிர்வாக அங்கத்தினர்களும் கலந்து, வரிசையான முறையில் சுற்றுப்பிரயாணத் திட்டம் வகுத்துக்கொள்ள வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம். மாதக்கடைசி வாரத்தில் திருநெல்வேலி மாநாடு இருப்பதால் மாநாட்டிலிருந்து வரிசையாக ஒரு வாரம் திருநெல்வேலி ஜில்லாவும், அதற்கு முந்தினவாரம் மதுரையும் அதற்கு முந்தினவாரம் இராமநாதபுரமும், வைத்துக்கொள்வது நலமாக இருக்கும்.

# பெரியார் ஈ-வெ-ரா

### சுற்றுப்பிரயாணம்

---

#### மதுரை ஜில்லா

மதுரை ஜில்லாவில் ஜனவரி மாதம் 13ந் தேதி முதல் ஒரு வாரம் 20ந் தேதிவரை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யதிட்டம் ஏற்பாடு செய்திருப்பதாக தோழர்கள் சுக்குனி, முத்திருளாண்டி ஆகியவர்கள் தெரிவிக்கிறார்கள்.

மற்ற விபரங்கள் அவர்களைக்கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

#### ராமநாதபுரம் ஜில்லா

6ந்தேதி முதல் 12ந்தேதி வரை

காரைக்குடி
திருப்பத்தூர்
சிவகங்கை
அருப்புக்கோட்டை
சாத்தூர்
ஸ்ரீவில்லிபுத்தூர்
ராஜபாளையம்

o o

அதாவது ஜனவரி 6ந் தேதி முதல் 12ந் தேதி வரை ராமநாமபுரம்,

இதில் ஏதாவது சிறிது மாற்றமேற்படலாம்.

13-முதல் 20-வரை மதுரை,
21-முதல் 27-வரை திருநெல்வேலி,

இதை அமைப்பாளர் தோழர் ராமசுப்பையா அவர்கள், அந்தந்த ஜில்லா மாகாணக் கழக நிர்வாக அங்கத்தினர்களைக் கொண்டும், ஜில்லாக்கழக தலைவர் காரியதரிசிகளைக் கொண்டும் கலந்து (சுற்றுப்பிரயாணத்தை) நடத்துவிப்பார்.

#### ஆண்டுவிழா

சேலம் செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழக 3வது ஆண்டுவிழா தைத் திங்கள் முதல் வாரத்தில் நடைபெற இருக்கிறது. விழாவில் தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ. முதலிய பல தோழர்கள் கலந்துகொள்வார்கள்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## தஞ்சை மாவட்ட 3வது திராவிட மாணவர் மாநாடு

திருத்துறைப்பூண்டி செல்வம் பந்தலில் 6-1-46 ஞாயிறு காலை 8மணி முதல் நடைபெறும்.

தலைவர்: எஸ். தவமணிராசன்,
திறப்பாளர்: மு. கருணாநிதி,
கொடியேற்றுபவர்: கடலூர் வீரமணி,
பெரியார் படத்திறப்பு: எ. பி. சனார்த்தனம் எம். ஏ.,
பாரதிதாசன் படத்திறப்பு: க. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்)
தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் கலந்துகொள்வார்கள்.

எஸ். கருணானந்தம்,
வரவேற்புக்கழகத் தலைவர்.
அரங்கண்ணல், செயலாளர்.

## தஞ்சைமாவட்ட முதலாவது கறுப்பு சட்டைப்படை மாநாடு

திருத்துறைப்பூண்டி செல்வம் பந்தலில் 6-1-46 மாலை 2மணி முதல் நடைபெறும்.

தலைவர்: இரா. நெடுஞ்செழியன் பி, ஏ., (ஆனர்ஸ்)
திறப்பாளர்: ஈ. வி. கே. சம்பத்,
கொடியேற்றுபவர்: ஆ. திராவிடமணி பி. ஏ.,
தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் கலந்துகொள்வார்கள். க. ச. படை அணி வகுப்பு நடைபெறுமாதலால், மாவட்டத்தோழர்கள் அனைவரும் கறுப்புசட்டை அணிந்து வருமாறு வேண்டுகிறோம்.

பி. எஸ். மணியம்,
வரவேற்புக்கழகத்தலைவர்.
வி. எஸ். பி. யாகூப், செயலாளர்.

## அறிவிப்பு

பில்படி பாக்கித்தொகை அனுப்பிக் கொடுக்காத பல ஏஜண்டுகளுக்கு டிசம்பர் 22ந் தேதி பத்திரிகை நிறுத்தப்பட்டது. மற்ற ஏஜண்டுகளும் இது விஷயத்தில் கவனம்செலுத்த வேண்டுகிறோம்.

மானேஜர்.

## கிருஷ்ணன்—பாகவதர் கருணை மனுச் செய்திகள்

### "ஹிந்து" பத்திரிகை பிரசுரிக்காததின் மர்மம் என்ன?

தமிழ் நாட்டுக் கலை நிபுணர்களான தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன்—எம். கே. தியாகராச பாகவதர் ஆகிய இருவர்கள் மீதும், கருணை காட்டும்படி, தமிழ் நாட்டிலுள்ள பல பொது ஸ்தாபனங்களும், பல பிரபலஸ்தர்களும், கூட்டங்கள் கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றி சர்க்காருக்கும், பத்திரிகைகளுக்கும் அனுப்பி வருகிறார்கள். அதை சில தேசியப் பத்திரிகைகளும் வெளியிட்டு வருகின்றன. "ஹிந்து"ப்பத்திரிகையின் சகாவான "சுதேசமித்திர"னும் நல்ல அளவுக்கு பிரசுரித்து வருகிறது. ஆனால் "ஹிந்து"வோ டை செய்திகளைக் கொஞ்சங்கூட பிரசுரிப்பதில்லை. இதன் மர்மம் என்ன?

### ரொம்பசரி!

பாகவதர், கிருஷ்ணன் இவர்கள் விசாரணை முறையையும், தண்டனையையும் பார்த்தபிறகு பினல் கோட் சட்டத்தையே திருத்தவேண்டுமென்று, பல இடங்களில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் பேசி வருகிறார்கள்.

அதற்கு ஆதாரவாகவே மாஜி அட்வகேட் ஜெனரல் சர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்களும், தற்போதைய அட்வகேட் ஜெனரல் கே. ராஜா அய்யர் அவர்களும், திருச்சி வக்கீல்கள் மாநாட்டில் சட்டங்களைத் திருத்தவேண்டுமென்று பேசியுள்ளார்கள்.

## இயக்கத்தோழர்கட்கு வேண்டுகோள்

வேலூர் தோழர் சி. பி. சின்னராசு அவர்கள் சீர்திருத்த நாடகம் நடிக்கிறேன், என் பெயரால், பல ஊர்களுக்கும்போய் பல இயக்கத்தோழர்களிடம் பண விஷயத்தில் நாணயக்குறைவாகவும், மோசமாகவும் நடந்து கொண்டிருப்பதாக பொறுப்புள்ள இடங்களிலிருந்து தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. நமது இயக்கத்தைச் சேர்ந்த தோழர்கள் என்பவர்களின் நிலை இம்மாதிரி நேர்ந்ததுபற்றி நாம் மிகவும் வருந்துவதுடன் அவர்கள் விஷயத்தில் மிக ஜாக்கிரதையாக இருக்கும்படி நமது தோழர்களை வேண்டிக்கொள்கிறோம்.

## சபாஷ் மருத்துவதோழர்களே!

பரமக்குடியில் மருத்துவ தோழர்களை அனுமதிக்காத ஹோட்டல் காரர்களுக்கு சவரம் செய்வதில்லையென்று மருத்துவதோழர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இது போலவே ராசிபுரம் முதலிய இடங்களிலும் தீர்மானித்து அமுலுக்குக் கொண்டு வந்துள்ளனர் என்று அறிகிறோம். மருத்துவர் வீட்டில், மேளம் வாசிப்போர், மேளம் வாசிக்க மறுத்தமைக்காக அவர்களுக்குத் தொழில் செய்வதில்லையென்று சுயமரியாதைத் தன்மையோடு மறுத்து, வெற்றி பெற்ற தோழர்களுடைய இரண்டாவது திட்டத்தையும் வரவேற்கிறோம்.

திராவிடர்
தலைவர்—தளபதி

இவர்களுடைய உருவமைந்த அழகிய பிக்சர் கேலண்டர்கள் பல கலர்களில் கண்ணைக்கவரும் வேலைப்பாடுடன் விரைவில் வெளிவருகிறது. வேண்டுவோர் தங்கள் ஆர்டரை பதிவு செய்து கொள்ளுங்கள்.

கவனிக்கவும்: எங்கள் வெளியீடுகள் அனைத்தும், 'டி. சாமுவேல், சர்ச் தாராவி, பம்பாய் 17" என்ற விலாசத்தில் கிடைக்கும். விபரங்கட்கு:

திராவிடன் பதிப்பகம், தபால்பெட்டி 13, வேலூர் வ. ஆ.

# பெரியார்

## டிசம்பர்-ஜனவரி மாத சுற்றுப்பிரயாணங்கள்

திருநெல்வேலி, மதுரை, திருச்சி சுற்றுப்பிரயாணத்திலிருந்து டிசம்பர் 7ந் தேதி ஈரோடு வந்த பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 8ந் தேதி ஈரோட்டைவிட்டுப் புறப்பட்டு 9ந் தேதி வடஆற்காடு ஜில்லா மாநாட்டுக்கு திருவத்திபுரம் சென்று 10ந் தேதி அசனம்மா பேட்டைக்கும் 11ந் தேதி வாழ்குடைக்கும் 12ந் தேதி வந்தவாசிக்கும் 13ந் தேதி வாணியம்பாடிக்கும் 14ந் தேதி சென்னைக்கும் சென்று, சென்னையில் 15ந் தேதி சுயமரியாதை மாநாட்டுக்கும், இரவு சிவாஜி நாடகத்திற்கும், 16ந்தேதி காலை சென்னையில் நிகழ்ந்த திராவிடர் கழக நிர்வாகக் கூட்டத்திற்கும் மாலையில் பெரம்பூர் பாரக்கில் நடந்த பொதுக்கூட்டத்திற்கும் அடுத்தநாள் வெளியூரிலிருந்து வந்திருந்த நிர்வாகக்கமிட்டி மெம்பர்கள், தோழர்களிடம் வேலைத்திட்டத்தைப்பற்றிப் பேசவும், அடுத்தநாள் 18ந் தேதி ரேபியர் பார்க் கூட்டத்திற்கும், 19, 20ந்தேதி காஞ்சீபுரத்திற்கும் சென்று அங்கு கூட்டங்களில் பேசிவிட்டு 21ந் தேதி இரவு ஈரோடுவந்து சேர்ந்தார். 22ந் தேதி ஈரோட்டிலிருந்து பொள்ளாச்சி புறப்பட்டு, பொள்ளாச்சி மாநாட்டைத் திறந்துவைத்து, மாலை பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு 24ந் தேதி ஈரோடு வந்து சேர்ந்தார். 27ந் தேதி தாராபுரத்திற்கும், 29ந் தேதி எடப்பாடிக்கும் சென்றுள்ளார்.

இனி ஜனவரி மாதத்தில் இது போலவே மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தென்னாற்காடு ஆகிய ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. சுற்றுப்பிரயாண நிகழ்ச்சியை மதுரையில் தோழர் முத்திருளாண்டி இடமும், ராமநாதபுரத்தில் தோழர் ராமசுப்பையாவிடமும், திருநெல்வேலியில் தோழர் பிரமநாயகமிடமும் கேட்டு ஏற்பாடு செய்துகொள்ளவும்.

---

மாயவரம் தாலுக்கா திருச்செம்பொன்பள்ளி திராவிடர்கழக பொதுக்கூட்டம் 17-10-45-ல் தோழர் டி. ராமசாமி தலைமையில் நடைபெற்றது.

## சிவாஜி நாடகம்

15-12-45 இரவு 8-30 மணிக்கு சென்னை செயிண்ட் மேரிஸ் ஹாலில் தளபதி சி. என். அண்ணாதுரை எழுதிய "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" என்னும் நாடகம், காஞ்சி திராவிட நடிகர் கழகத்தாரால் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ. தலைமையில் நடிக்கப்பெற்றது. தளபதி சி. என். ஏ. அவர்களும் தோழர்கள் டி. வி. நாராயணசாமி, கணேசன் மற்றும் பல தோழர்களும் நடித்தனர். பெரியார் ஈ. வெ. ரா., கவிஞர் பாரதிதாசன் ஆகியோர் நாடகத்தைப் பாராட்டி சொற்பொழிவாற்றினார்கள். 3000க்கு மேற்பட்ட மக்கள் நாடகத்தைக் கண்டு களித்தனர்.

## அறிவிப்பு

'குடி அரசு' இவ்வாரம் சிறிய அளவில்தான் வெளியிட முடிந்தபடியால் முக்கியமான செய்திகளே பிரசுரிக்க முடிந்தது. பல தோழர்கள் அனுப்பிய செய்திகள் வெளிவராமைக்கு மன்னிக்குமாறு கோருகிறோம்.

திருவத்திபுரம் மாநாட்டுத் தீர்மானங்களும், பொள்ளாச்சி மாநாட்டு நிகழ்ச்சிகளும் பெரியார் அவர்களின் வடஆர்க்காடு மாவட்ட சுற்றுப்பிரயாணச் செய்திகளும் அடுத்தவாரம் வெளிவரும்.

ஆ—ர்.

## உதவி செய்க!

நமது இயக்கத்தில் பற்றுகொண்டவரும் இந்தி எதிர்ப்பில் சிறைசென்றவருமான தோழர் நா. பழனிசாமி அவர்கள் 19-12-45ல் இயற்கை எய்தினார். அவரது மூன்று குழந்தைகளுக்கும், நோயுற்ற மனைவியாருக்கும், தாயாருக்கும் ஆறுதல் அளித்து உதவிசெய்ய முயற்சி எடுக்கப்பட்டிருப்பதால் பண உதவி செய்ய விரும்பும் தோழர்கள்

"பழனிச்சாமி குடும்ப சகாய நிதி"
காரியதரிசி மதுரை மாவட்ட
திராவிடர் கழகம்,
326, கீழமாசி வீதி, மதுரை"

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

---

திருச்சி வரகனேரி 29-11-45 திராவிட வாலிபர் கழக கூட்டத்தில் தோழர் ராயரின் சகோதரி மகனுக்கு ஜேம்ஸ்துரை என்று பெயர் வைக்கப்பட்டது.

ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் :: கலர் புடவைகள்
உயர்தர ரகங்கள்! உத்திரவாத ஜரிகை!!
80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P. O. திருச்சி.

ஒலி பெருக்கி

நீங்கள் விரும்பும் "நேஷனல் ரேடியோ"
ஒலிபெருக்கி மின்சார வசதியில்லாத இடங்களிலும்
பாட்டரி மூலம் அமைத்துக்கொடுக்கப்படும்.

நேஷனல் ரேடியோஸ்,
99, பெரிய தெரு, கும்பகோணம்.

# திராவிடர் கழகங்கள்

திருத்துறைப்பூண்டி திராவிடர் கழகத்தின் சார்பில் 8-11-45 மாலை தோழர் என். அப்துல்லா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்று பலர் பேசினர். தோழர் எஸ். கருணானந்தம் நன்றி கூறினார்.

13-11-45ல் தோழர் பி. எஸ்.மணியம் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் எஸ். கே. சாமி சொற்பொழிவாற்றினார்.

* *

வேலூர் திராவிடர் கழகத்தின் முதற்கூட்டம் 27-11-45ல் தோழர் வி. டி. நடராச முதலியார் தலைமையில் நடைபெற்றது. தோழர் வி. டி. துரைசாமி முதலியாரைத் தலைவராகக்கொண்ட கமிட்டியும் நிறுவப்பட்டது.

* *

சலகண்டபுரத்தில் 24-11-45ல் தோழர் அ. மு. அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக கூட்டத்தில் டிசம்பர் மாத முடிவுக்குள் திராவிடர் கழக ஆண்டுவிழாவை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. தோழர்கள் அண்ணாமலை, வீரபாலன், கண்ணன் முதலியோர் பேசினர்.

* *

பொன்மலை திராவிட வாலிபர் கழக அங்கத்தினர் கூட்டம் 23-11-45 மாலை தோழர் ஜி. பராங்குசம் தலைமையில் நடைபெற்றது.

* *

கள்ளக்குரிச்சியில் 26-11-45 இரவு தோழர் திராவிட மணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திராவிட மாணவர் கழகம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. தோழர் ராமசாமி தமிழொளி எனவும், சீனிவாசன் தமிழ்மணி எனவும், பெருமாள் தமிழரசன் எனவும் பெயர்களை மாற்றிக்கொண்டார்கள்.

* *

மாயவரம் திராவிடர் கழக ஆண்டு விழா 12-11-45ல் தோழர் வி. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது. தளபதி சி. என். அ. கொடியேற்றிவைத்தார். தோழர் கே. கே. நீலமேகம் நடராசன் படத்தை திறந்து வைத்தார். தி. பா. நாதன் ஆண்டு அறிக்கை வாசித்தார். பலர் சொற்பொழிவிக்குப்பின் விழா முடிவுற்றது. மாலை தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கின்னத்தம்பி, காஞ்சி கல்யாணசுந்தரம், தளபதி அண்ணாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

* *

திருவண்ணாமலை திராவிடர் கழகத்தின் கமிட்டிக்கூட்டம் தோழர் கோபால் தலைமையில் 22-11-45ல் நடைபெற்று பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேறின.

* *

கரந்தையில் 2-12-45 மாலை தஞ்சை திராவிட வாலிபர் கழக கட்டிடத்தில் கழக தலைவர் கோ. சி. பெரியசாமிப் புலவர் தலைமையில் உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. புது ஆண்டு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டு தோழர் பி. வேணுகோபால் பி. ஏ., பி. எல். தலைவராகவும் தோழர் துரைராசு துணைத்தலைவராகவும் தோழர் எம். எம். நடராசன் பொருளாளராகவும் தோழர் என். எஸ். சண்முகவடிவேல், பொருளாளர்—பொதுச்செயலாளராகவும் வி. சந்திரசேகரன் கணக்காராய்ச்சியாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழக நிதிக்காக ஒரு நாடகமும் இசையரங்கும் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

* *

செங்கற்பட்டு திராவிட இளைஞர் கழக சார்பில் 2-12-45 மாலை தோழர் எம். சின்னையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் எம். சின்னையா, ஜி. கோதண்டராமன், வி. எகாம்பரம், கே. வேதகிரி ஆகியோர் முறையே தலைவர், செயலாளர், கூட்டுச்செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* *

திருக்காட்டுப்பள்ளியில் 2-12-45ல் தோழர் சாமியா தலைமையில் நடந்த திராவிடர் கூட்டத்தில் ஆக்கவேலைக்கான ஏற்பாடுகள் முடிவு செய்யப்பட்டன.

o o

திருச்சி திராவிட இளைஞர் கழக வினைக் குழுவினர் கூட்டம் தோழர் தி. ஆ. மாணிக்கவாசகம் தலைமையில் 28-11-45ல் கூடி கழகக்கட்டுத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

o o

கள்ளிகுளத்தில் 1-12-45ல் நடைபெற்ற திராவிடர் கழக மாபெருங் கூட்டத்திற்கு ஆதரவும் ஆக்கமும் அளித்தவர்களுக்கு கழகத் தலைவர் தோழர் எஸ். வி. டேவிஸ் நன்றி தெரிவிக்கிறார்.

o o

மதுரை கோரிப்பாளையத்தில் 2-12-45ல் திராவிடர் கழக ஆரம்ப கூட்டம் தோழர் சடையாண்டி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பெ. துரைராஜ், மு. ராமசாமி, ம. சி. மணி, ந. சு. திருப்பதி, ரா. மருதப்பன் ஆகியோர் முறையே தலைவர் துணைத்தலைவர், பொருளாளர், காரியதரிசிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

கணியூர் திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் 23-11-45ல் கூடி தோழர்கள் ம. சுப்பநாயுடு, ஏ.மாணிக்கம், மு. திருமலைசாமி, ஏ. எஸ். துரைசாமி, கே. சுப்பிரமணியன் ஆகியோர் தலைவர், உபதலைவர், பொருளாளர், செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டது.

* *

சென்னை சிந்தாதிரிப்பேட்டை திராவிடர் கழக பொதுக்கூட்டம் 25-12-45 மாலை தோழர் ரெங்கநாதம் தலைமையில் நடைபெற்று தோழர் எஸ். ராமசாமி, பி. எல். அப்புலு ஆகியோர் பேசினார்கள்.

* *

பெங்களூர் உப்புமாநகர் திராவிடர் கழகத்தில் கோலார் தங்கவயல் தோழர் துரைராஜ் கோஷ்டியாரால் “நான் கண்ட முருகன்” என்னும் சீர்திருத்த காலட்சேபம் தோழர் எம். குழந்தைவேலு தலைமையில் 25-11-45 நடைபெற்றது.

o o

திண்ணயம் கிராமத்தில் திராவிடர் கழக சார்பில் 25-11-45 மாலை தோழர் எஸ். இளங்கோவன் தலைமையில் தோழர்கள் டி. பி. வேதாசலம், சீனிவாசன், பாண்டுரங்கம் ஆகியோர் பேசினார்கள். ஜெகதீசன் மாணிக்கம் பாடினார்கள்.

---

# திராவிட நாட்டுச் செய்திகள்

தூத்துக்குடி அருந்ததியார் சமூக சீர்திருத்த சங்கப் பொதுக் கூட்டம் 26-11-45-ல் தோழர் பெ. க. காத்த முத்து தலைமையில் நடைபெற்று பல மாணவத் தோழர்கள் பேசினர்.

சேலம் செவ்வாபேட்டை தேவாங்கபுரம் கைத்தறி நெசவாளர்கள் சங்க ஆதரவில் 30-11-45-ல் இரவு தோழர் எஸ். வி. மாணிக்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் 'நெசவாளர் கடமை' என்பதுபற்றி விளக்கப்பட்டது.

தூத்துக்குடி சௌந்திர பாண்டியன் தமிழர் சமதர்ம சங்க நிர்வாக கமிட்டிக்கூட்டம் 20-11-45-ல் தோழர் பி.பால் தலைமையில்கூடி திருச்சி மாநாட்டுத் தீர்மானங்களை ஆமோதித்ததோடு போலி சுயமரியாதைச் சங்கத்தையும் பகிஷ்கரிப்பதாகத் தீர்மானம் நிறைவேறியது.

சாக்கோட்டை புதிய ஆரம்பப் பாடசாலையின் முதலாவது ஆண்டு விழா 26-11-45 மாலை கும்பகோணம் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் தோழர் சீனிவாசன் பி. ஏ., எல். டி., தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சின்னதம்பி, முத்து தனபால், வர்க்கி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

துறையூரில 21-10-45-ல் பெரியார் ஆதிதிராவிட வாலிப கழகத்தின் சார்பாக அம்பேத்கார் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் லட்சுமணய்யா தலைமையில் தோழர்கள் ஜனார்த்தனம், கே. வி. அழகிரிசாமி ஆகியோர் பேசினார்கள்.

குள்ளம்பட்டியில் 4-12-45 மாலை தோழர் கரிவண்ண மூப்பனார் தலைமையில் நாடார் குல முன்னேற்றக் கூட்டம் நிகழ்ந்தது.

15-11-45-ல் சேலம் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் ஆர். பி. நடராசன் தலைமையில் நடைபெற்றது. அது சமயம், சங்கரன், கே. கே. பூர்னையா, ஆதிகேசவலு மற்றும் பல தோழர்கள் நெசவுத் தொழிலாளர் நெருக்கடியான நிலையைப் பற்றி சொற்பொழிவு ஆற்றினார்கள்.

முசிரி தாலுக்கா, கொளக்குடியில் 15-11-45-ல் விஸ்வகுலச் சங்கம் நிறுவப்பட்டு நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப் பட்டது.

சிதம்பரம் தாலுக்கா பூந்தோட்டம் திராவிடர்கழக கூட்டம் 26-11-45ல் தோழர் கோவிந்தராசலு தலைமையில் நடைபெற்றது.

18-11-45ஞாயிற்றுக்கிழமை இரவு 8-30 மணிக்கு காட்டுப்புத்தூர் ஷெடியூல்டு பள்ளர் ஹாஸ்டல் கமிட்டியின் சார்பாகத் திருச்சி தோழர் டாக்டர் டி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. விடுதிக்கு வீ. எம். பழனிவேல் ஹாஸ்டல் என்று திருத்தி பெயரிடப்பட்டது. தோழர்கள் வீ. எம். பழனிவேல், கே. பி. காத்தமுத்து, வெள்ளச்சாமி முதலானவர்கள் பேசினர்.

18-11-45 ஞாயிறு மாலை 7 மணிக்கு கூடலூர் மாலுமியார் பேட்டை திரௌபதியம்மன் கோவிலில் தோழர் ஜி. இரங்கசாமி நாயர் அவர்கள் தலைமையில் நடந்த உப்பளத் தொழிலாளர் கூட்டத்தில் தோழர்கள் ஆ. திராவிடமணி, பொ. தியாகராசன் உப்பளத் தொழிலாளர்களின் குறைகளை விளக்கிப் பேசினார்கள். உப்பளத் தொழிலாளர் சங்கம் விரைவில் நிறுவுவதென முடிவு செய்யப்பட்டது.

19-11-45 திங்கள் மாலை 6 மணிக்கு விழுப்புரத்தில் நடைபெற்ற முஸ்லிம் லீக் கூட்டத்தில் தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ., அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

3-11-45-ல் சின்ன சேலம் செங்குந்த வாலிபர் சங்க இரண்டாவது ஆண்டு விழா தோழர் பூ. வை. கந்தசாமி முதலியார் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தெய்வநாயகம், அருணாசலம், இராமலிங்கம், எழில் நிலவன் சொற்பொழிவாற்றினார்கள்.

# தீபாவளி கொண்டாடாத தீரர்கள்

(தீபாவளி கொண்டாடுவதில்லையென்று சுமார் 10,000க்கு மேற்பட்ட தோழர்கள் கையொப்பமிட்டு அனுப்பியுள்ளனர். இதுவரை சுமார் 7000 பெயர்கள் மட்டுமே வெளிவந்துள்ளன. சிலர் கையெழுத்துக்கள் கண்டுபிடிக்க முடியவில்லை. இனியும் தொடர்ந்து வெளிவரும்.)

**துறிஞ்சிப்பாடி.**

ஆர் சரவணன் பி ஆர் சுப்ரமணியம் எம் துரைராஜன் ஏ பாம்பன் கே டி பி பழனிசாமி பி வைத்தியனாதன் பி ராஜாராம் சி ராமலிங்கம் ஏ பழனிசாமி எஸ் சேஷாசலம் ரெட்டியார் வி ஆதிமூலம் கே விசுவலிங்கம் கே நாராயணசாமி கே டி ஆர் சொக்கலிங்கம் ஆர் ராமய்யன் எம் வீரப்பன் ஜே கண்ணப்பா கே வி அங்கமுத்து வி கோவிந்தசாமி எம் கோவிந்தசாமி எம் வி கோவிந்தசாமி எஸ் கே திருநாவுக்கரசு ப சிவகாருண்யம் வி கிருஷ்ணசாமி டி அம்சவேணி டி ருக்மணி ஏ தங்கராசு எஸ் சிவக்குழந்தை வி பாவாடை கே டி அகஸ்தியர் சி ராசு கந்தசாமி இரா தென்னரசன் பி எஸ் துரைசாமி

**வந்தவாசி.**

என் குஞ்சிதபாதம் த தசரதன் டி சடகோபன் ப கிருஷ்ணன் எம் சொக்கலிங்கம் பி கோபால் பி ஏ, வெ தேவராசன் கு ஆதிமூலம் பி ஏ, க தனபால் எ தங்கவேல் பி சம்பந்தன்

**வேடிச்சிபாளையம்.**

சி சண்முகம் கே மருதநாயகம் எஸ் ராஜகாந்தம் கே சிங்காரம் எம் வடிவேல் வி ஆறுமுகம் தா காத்தான் க சுப்ரமணியன் கே நடேசன் டி பொன்னுசாமி வி பெரியசாமி இராஜரத்தினம் நீலமேகம் ஆண்டியப்பா

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street ERODE,